1981 பிப்ரவரி 26] [திரு. ரா. உமாநாத்]

Provided further that where a Thursday has been taken over for the transaction of Government business under the above proviso, the Speaker may allot an other day in lieu thereof, in the same or subsequent week for the Private Members business."

என்று இருக்கிறது. இதற்குப் பதில் மற்றொரு வியாழக்கிழமை என்பது கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் எல்லார்க் கட்சித் தலைவர்களின் எண்ணத்தையும் அறிந்து செய்கிறேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32 (1) ஐத் தளர்த்தி, இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

2. ஒழுங்குப் பிரச்சினை

(ஆ) விதி 108(1) இன் கீழ் திருத்த அறிக்கை அவைமுன் வைக்கப் பெறுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 107-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக அறிக்கை ஒன்றினை மாண்புமிகு முன்னவர் அவர்கள் அளிப்பார்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக இந்த அறிக்கையை இங்கே வைக்கிறேன்.

*** *** ***

(முற்பகல் 11-10.)

திரு. ரா. உமாநாத்: இந்தக் கரெக்ஷன் ஸ்டேட்மெண்ட் மேலே பாயிண்ட் ஆப் ஆர்டர். ரூல் 108-இல் தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது.

Rule 108 (1)—Copies of the statement proposed to be made by a Minister correcting the answer given by him to a starred/short notice question or any other statement made or placed before the

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

House shall be placed in the Notice Office/Library half-an-hour before the sitting of the Assembly on the day on which the statement is to be made for the information of the Members.

அப்படியென்றால்

How is it consistent?

இங்கே நோட்டீஸ் ஆபீஸ் இல்லாததால் இங்கேயே வைத்திருக்கலாம், அட்வான்ஸ் காப்பியிலே வைத்திருக்கலாம்; ஆனால் அப்படிப்பட்ட ஸ்டேட்மெண்ட் வைக்கப்படவில்லை. எனவே இந்த ரூலை வயலேட் செய்து ஸ்டேட்மெண்டைப் படித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த ஸ்டேட்மெண்ட் இன்றைக்கு ரெக்கார்டிலே போகக் கூடாது; ரூல்ஸ்க்கு உட்பட்டுத்தான் எல்லாம் நடக்க வேண்டும்.

Dr. K. SOWRIRAJAN : On a point of order, whether the statement made by the Chief Minister was in reply to a question or was in the form of a statement,—I would like to know.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 107-வது விதி தெளிவாகக் குறிப்பிடுவது, ''வினாவிற்கு அல்லது துணை வினாவிற்கு விடையளிக்கும் வகையிலோ அல்லது இவ் விதிகளில் 106-வது விதியின் கீழோ அல்லது வேறு எந்த வகையிலோ பேரவையில் அமைச்சர் ஒருவர் அளித்த அறிக்கையில் ஏதேனும் தவறு உள்ளதாக அமைச்சர் கருதினால், பேரவைத் தலைவரின் இசைவைப் பெற்று, மேலும் ஓர் அறிக்கையை அதே கூட்டத்திலோ அல்லது பின்னர் ஒரு நேரத்திலோ அளிக்கலாம்'' என்பது.

இதில் அவை முன்னவரவர்கள்,

* * * * * * *

என்று சொல்லியிருக்கிறார்கள்,

ஆனால் நண்பர் உமாநாத் அவர்கள் எழுப்பினது உள்ளபடியே ஒழுங்குப் பிரச்னையாகும். எப்படி என்றால் இந்த மேஜையின்மீது முதலிலேயே அவை உறுப்பினர்களுக்கு வைக்கப்பட வேண்டும். அது இரகசியக் குறிப்பாக இருந்தாலும் கூட அவை உறுப்பினர்களுக்கு இந்த அவையில் தரப்படவேண்டும். அது மீறப்பட்டிருக்கிறது. எனவே, இந்த அறிக்கையை 108-வது விதியின்படி — அந்த அடிப்படையில் நாளையதினம் மாற்றித் தருவதுதான் நலம் என்று நான் கருதுகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

1981 பிப்ரவரி 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றி அறிக்கையை அமைச்சர் நாளையதினம் அளிப்பார். எனவே அமைச்சர் அளித்த அறிக்கை அவைக் குறிப்பிலே ஏற வேண்டியதில்லை என்று ஆணை யிடுகிறேன்.

5. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அனுமதி கோருவார்கள்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, சட்ட முன் வடிவை அறிமுகப்படுத்துவதையே ஆட்சேபிக்கக்கூடிய ஒரு பிரச் னையை எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்கமாக, சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்கள். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது உறுப்பினர்கள் தங்கள் கருத்தைச் சொல்லலாம்.

திரு. ரா. உமாநாத் : அறிமுகம் செய்வதையே அப்ஜெக்ட் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனினும் முதலில் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதிகோரும் தீர்மானத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மொழியட்டும். அத் தீர்மா னத்தை பேரவையின் முடிவிற்கு விடுவதற்கு முன் உறுப்பினர் கள் தங்கள் கருத்தைச் சொல்ல சந்தர்ப்பம் அளிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

திரு. என் சங்கரய்யா : தலைவர் அவர்களே, தமிழக அரசு சில இன்றியமையாப் பணிகளில் ஒழுங்குமுறையை மேலும் கண்டிப்பாகச் செயல்படுத்த வகை செய்வதற்கும் அது தொடர் பானவைகளுக்கு வகை செய்வதற்குமான இந்தச் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்வதை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்